In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC | 19/2022 |
| PW: | 1 |
| காவல் நிலையம்: | கயத்தார் |
| தேதி: | 06.08.2026 நாள்: புதன் |
| பெயர்: | தீபன் |
| த/பெ: | சூரிய நாராயணன் |
| ஊர்: | கயத்தார் |
| வேலை: | கான்ட்ரெக்டர் |
| வயது: | 39 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06.08.2026**
(Accused A1 to A4 present).

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் கயத்தாரில் வசித்து வருகிறேன். நான் கான்ட்ரெக்டராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02.12.2016 ம் தேதி முருகன் என்பவர் கயத்தார் புது பஸ் ஸ்டாண்ட் அருகே மலையரசன் காம்பெக்ஸ் – ல் கயத்தார் மொபைல்ஸ் என்ற பெயரில் எனது செல்போன் கடைக்கு வந்திருந்தார்.

2) அப்போது முருகன் சாம்சங் மொபைலை சர்வீஸ்ற்காக கொடுத்திருந்தார். நான் சர்வீஸ் செய்து சரிசெய்து அவரது மொபைலை திரும்ப கொடுத்துவிட்டேன். பின்னர் மறுநாள் அவருடைய மொபைலை அவரே உடைத்து விட்டு எனது கடைக்கு வந்து எனது மொபைலை திரும்ப மாற்றி கொடுங்கள் இல்லையென்றால் எனது பணம் ரூபாய். 4000/–யை திருப்பி கொடுங்கள் என்று கேட்டார்.

3) அப்போது நான் மொபைலை நல்ல முறையில் தான் சரிசெய்து கொடுத்தேன் என்று முருகனிடம் கூறினேன். அதற்கு அவர் என்னிடம் வாக்குவாதம் செய்தார். கடை இருக்காது என்று மிரட்டினார்.

4) பின்னர் 27.12.2016 ம் தேதி இரவு 08.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் எனது மொபைல் கடைக்கு வந்து முருகனின் பணத்தை கொடு நீ எப்படி அந்த பணத்தை எடுத்துகொள்வாய் யாரைக்கேட்டு நீ கடையை திறந்தாய் என்று என்னை மிரட்டினார்கள்.

5) பின்னர் நான் பயந்து நின்ற போது ஆஜர் எதிரிகள் சேர்ந்து எனது கடையை அடித்து நொறுக்கினார்கள். அதில் இருந்த Laptop, Computer, Showcase ல் உள்ள அனைத்து மொபைல்களையும் கல்லை எடுத்து போட்டு அடித்து நொறுக்கினார்கள்.

6) பின்னர் நான் பயந்து போய் கடையிலிருந்து சென்றுவிட்டேன். பின்னர் உடனே கயத்தார் காவல்நிலையம் சென்று சம்பவத்தை குறித்து புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். ( **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் 20 வருடமாக மொபைல் கடை நடத்தி வருகிறேன். பொருட்களின் தேச மதிப்பு எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார் மனுவை நான் தான் கொடுத்தேன் அதை எனது மனைவி எழுதினார். நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

2) முதல் விசாரணையில் கூறியதை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். புகார் மனுவில் முருகன் சாம்சாங் மொபைலை சர்வீஸ்ற்கு கொடுத்ததாகவோ அவர் என்னை மிரட்டியதாகவோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக புகார் மனுவில் யாரையும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Laptop, Computer ஆகியவற்றிகுரிய இரசீதுகள் எதையும் போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. போட்டோ எடுத்தார்கள்.

4) போலிசார் என்னை விசாரணை செய்த போது எதிரிகள் கல்லை போட்டு தான் கடையை அடித்து நொறுக்கினார்கள் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

5) சம்பவம்நடந்த இடத்தில் எனது கடைக்கு அருகில் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். Laptop, Computer, மொபைல் ஆகியவற்றை எந்த கம்பெனியை சேர்ந்தவை என்று குறிப்பிட்டு புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

6) எதிரிகள் அசிங்கமாக பேசியதால் அவமானம் ஏற்பட்டதாக புகார் மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. புகார் மனுவை ஏட்டையா கூறி தான் நான் எழுதினேன். எதிரிகள் மிரட்டல் விட்டதால் எனக்கு உயிர்பயம் ஏற்பட்டதாக கூறியுள்ளேனா என்றால் இல்லை.

7) சம்பவம் நடந்த உடனே நான் காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். உடனே போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து உடைந்த பொருட்கள் மற்றும் கல்லை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான்.

8) நான் கொடுத்த புகார் மனுவில் சேத மதிப்பு ரூபாய். 20,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏட்டையா கூறியதால் எழுதினேன். மேற்படி விபரத்தை ஆய்வாளர் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

9) புகார் மனுவில் எதிரிகள் போனை எடுத்து சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி போனின் மாடல் மற்றும் மதிப்பு, குறித்து கூறியுள்ளேனா என்றால் இல்லை. எத்தனை போனை எடுத்து சென்றார்கள் என்று 3 போனை எடுத்து சென்றார்கள்.

10) மேற்படி போன்களை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. எனது கடையில் சிசிடிவி கேமராக்கள் உள்ளதா என்றால் இல்லை. அருகில் உள்ள கடையில் இருந்து சிசிடிவி கேமரா அன்றைய தினம் வேலை செய்யவில்லை.

11) தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் என் மீது வழக்கு இருந்தது என்றால் சரிதான். என் மீது 4,5 வழக்குகள் நிலுவையில் உள்ளது என்றால் இல்லை. நான் தான் 1வது எதிரி கடைக்கு மொபைல் வாங்க வந்த போது அவரை தகாத வார்த்தைகளால் பேசி, சண்டை செய்து 1 வது எதிரியை கத்தி எடுத்து காயப்படுத்தி அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12) நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் எதிரி கடையில் மொபைல் வாங்கவரவில்லை என்றாலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் 1 வது எதிரி என் மீது கொடுத்த புகாரானது நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.